Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: shenjy@state.gov ● http://lk.usembassy.gov

Release No. 20170611

## இலங்கையின் வெள்ள அனர்த்த நிவாரணப் பணிகளில் யூ. எஸ். எஸ் லேக் இயறி கப்பலானது பங்கேற்றல்

**கொழும்பு ஜூன் 11 :** இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு ஆதரவளிக்கும் முகமாக ஐக்கிய அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான கப்பலான யூ. எஸ். எஸ். லேக் இயறியில் கொழும்பை வந்தடைந்த அமெரிக்க இராணுவ உத்தியோகத்தர்களை இலங்கையிலுள்ள ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தின் பதில் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன் வரவேற்றுக் கொண்டார்.

“வெள்ள அனர்த்தத்தினால் உயிரை இழந்த மற்றும் பாரிய அழிவைச் சந்தித்துள்ள இலங்கைவாழ் மக்களின் துயரை நாமும் பகிர்ந்து கொள்கின்றோம்” என அமெரிக்கப் பசுபிக் பிராந்தியக் கட்டளைத் தளபதி அட்மிரல் ஹரி ஹரிஸ் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில், “நண்பர்கள், நண்பர்களுக்குக் கஷ்டமான தருணத்தில் உதவுவார்கள், இதன்பிரகாரம் இந்தக் கஷ்டமான நேரத்தின்போது அமெரிக்கா இலங்கையுடன் கைகோர்த்து நிற்கின்றது” என்றும் கூறினார்.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவின் காரணமாக, அமெரிக்கப் படையினர் நெருக்கடி காலத் தேவைப்பாடுகளிற்கு ஈடுகொடுக்கக்கூடிய நிலையில் உள்ளனர். இதற்கும் மேலாக அமெரிக்கக் கட்டளைப் பசுபிக் பிரிவானது அனர்த்த நிவாரணம் மற்றும் இடர் குறைப்பு என்பவற்றிற்கு உதவுவதற்காக இராணுவ விமானங்களையும் துறைசார்ந்த நிபுணர்களையும் விரைவில் அனுப்பி வைக்கவுள்ளது.

இந்நிலையில் யூ. எஸ். எஸ். லேக் இயறியின் கட்டளை அதிகாரியான கப்டன் டர்ரென் மக்பேர்ஸன் தெரிவிக்கையில், “வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் பாடசாலைகளுக்கான புனர் வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது அல்லது உணவு மற்றும் குடிநீர் வசதிகளை வழங்குவது எதுவாயினும்சரி எமது கடற்படை உத்தியோகத்தர்கள் இந்நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காகச் சிறந்த பயிற்சியினைப் பெற்றவர்களாக உள்ளனர்

என்பதுடன், நாம் இலங்கை மக்களிற்கு நிவாரணம் மற்றும் உதவிகளை வழங்குவதற்கும் தயாராகவுள்ளோம்'' என்று கூறினார்.

அமெரிக்க இராணுவமானது சர்வதேச நிவாரண அமைப்புக்களுடன் வெற்றிகரமான முறையில் இணைந்து பணியாற்றுதல் மற்றும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணிகளைச் செய்யும் நாடுகளிற்கு ஆலோசகராக இருந்து செயற்படுதல் ஆகியவற்றில் ஒரு நீண்ட கால வரலாற்றினைக் கொண்டுள்ளது. கடந்த வருடம் அமெரிக்கக் கட்டளைப் பசுபிக் பிரிவானது யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இரு இடங்களிலும் முன்னெடுக்கப்பட்ட பல்தேசிய உதவித் நிகழ்ச்சித் திட்டங்களிற்காக முதலுதவி உத்தியோகத்தர்களிற்கான மருத்துவப் பயிற்சிநெறி, பாடசாலைகளைப் புதுப்பித்தல் மற்றும் சூழவுள்ள மக்கள் சமூகத்திற்கான மருத்துவ சிகிச்சை முகாம்கள் என்பவற்றில் இலங்கை இராணுவத்துடன் இணைந்து பணியாற்றியுள்ளது. மேலும், அமெரிக்க சிவில் விவகார உத்தியோகத்தர்களும் இலங்கை இராணுவத்தினரும் இணைந்து கடந்த மூன்றாண்டு காலப் பகுதியில் பிராந்தியம் முழுவதிலும் உள்ள சிவில் மற்றும் இராணுவ உத்தியோகத்தர்களை உள்வாங்கி அனர்த்த முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பயிற்சிப்பட்டறைகளைத் தொடர்ச்சியாக நடத்தியுள்ளனர்.

இந்தவகையில் அமெரிக்க இராணுவத்தின் இலங்கைக்கான விஜயங்கள் அனைத்தும் இலங்கை இராணுவம் மற்றும் சிவில் சேவை முகவர் நிலையங்களுடனான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு வழிவகை செய்துள்ளதோடு, ஐக்கிய அமெரிக்க இராணுவ ஆளணியினர் தேவைப்பாடுகளின்போது வினைத்திறன்மிக்க வகையில் செயற்படுவதற்கும் வழிவகை செய்துள்ளது எனலாம்.

யூ. எஸ். எஸ். லேக் இயறி கப்பலானது 2017 ஆம் ஆண்டு கடந்த மே மாதம் தனது சொந்தத் துறைமுகமான சான் தியகோவிலிருந்து புறப்பட்டு மேற்குப் பசுபிக் பிராந்தியத்திற்குச் சென்று அங்கு இதுவரை காலமும் தரித்து நின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# # #